இல்லத்தரசிகளின்
தொல்லைகளை
நிறைவு செய்யலாம்!
- சமையல் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அலங்காரப் பொருட்கள்
- பாதணிகள், பாத்திரங்கள்
இன்னும்பல...
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஆடி: 30 நம்மாள்: 10 இதழ்: 185
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15-8-78

திருமணங்களா?
திருவிழாக்களா?
பண்டிகைகளா?
உற்சவங்களா?

உங்கள் தேவைகளை
நிறைவு செய்வோம்
எதற்கும் ஒருமுறை நாடுங்கள்
சி.சின்னத்துரை அன்பிரதர்,
யாழ்ப்பாணம் - போன் 284

...OF SRI LANKA ... RECEIVED

# குமாரசூரியரின் மகளுக்கு முறையற்ற காணி ஒதுக்கீடு

## ஜனதிபதி கமிஷன் முன் அரச வழக்கறிஞர் தகவல்

(கொழும்பு)

முன்னாள் தபால் தந்தி, வீடமைப்புநிர்மாணத்துறை அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரின் மகள் செல்வி சகுந்தலா குமாரசூரியருக்கு, கடந்த ஆட்சிக் காலத்தில், முறையற்ற விதத்தில் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இவ்வாறு விசேட ஜனதிபதி ஆணைக்குழு முன்னிலையில் அரச சட்டத்தரணி திரு. ஏ. சி. டி. சொய்ஸா நேற்றுத் தெரிவித்தார்.

திரு. சொய்ஸா மேலும் கூறியதாவது:

''கொழும்பு-பம்பலப்பிட்டி 'சிறபரி கார்டின்ஸ்'ஸில் மற்றையோருக்கு 7.5 பேர்ச் காணி, 42 ஆயிரம் ரூபாவுச்கு வழங்கப்பட்டவேளையில், திரு. குமாரசூரியரின் மகளுக்கு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் இணைப்புக் காரியதரிசியின் பணிப்புரையின் பேரில் 13 பேர்ச் காணி, 8 ஆயிரம் ரூபாவுககு வழங்கப்பட்டது,

### மனேகராவின் தொலைபேசி சம்பாஷனை

மாவட்ட நீதிபதியாக இருந்த திரு. சி. மனேகராவுக்கு நீதிபதிக்கான தகுதி இல்லை. அவர் நீதிமன்றத்திற்குச்

(6ம் பக்கம் பார்க்க)

## உணவுப்பொருட்களை தொடர்ந்தும் இறக்குமதி செய்ய முடியாது

### மதுறுஓயா திட்டத்தில் ஜே. ஆர்.

(மட்டக்களப்பு)

இன்றையநிலையில் தொடர்ந்தும் வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்துகொண்டிருக்கமுடியாது. இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளையும் கட்டுப்படுத்தமுடியாது.

இவ்வாறு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் மதுறு ஓயாத்திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே திரு ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினர்.

விவசாயக் கைத்தொழில் உற்பத்தியை அதிகரித்து நாட்டின் வேலையற்றோரின் பிரச்னையை முடிவுக்குக்கொண்டு வருவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் கூறிய ஜனதிபதி மேலும் கூறியதாவது:

(6ம் பக்கம் பார்க்க)

## "நாட்டைப் பிரிப்பதே கூட்டணியின் நோக்கம்"

### சன்சோனி கமிஷன் முன் யாழ். நாகவிகாரை தேரோ

(கொழும்பு)

'தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் நோக்கம் நாட்டைப் பிரிப்பதே. இதனலேயே அவர்களுக்கு கடந்த தேர்தலில் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன.'

இவ்வாறு யாழ். நாகவிகாரையின் பிரதம குரு வண கடவத்துவ நந்தராம நாயக்க தேரோ நேற்று கொழும்பில் நடைபெற்ற சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி சார்பில் சட்டத்தரணி திரு. லெஸ்லி பாட்லட் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

சாட்சி மேலும் கூறியதாவது:

1951-ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் நாகவிகாரையின் பிரதம குருவாகக் கடமையாற்றி வருகிறேன். 1977-ம் ஆண்டு நடைபெற்ற கூட்டங்களில் பேசப்பட்டது போல் நான் என்றுமே எவரும் பேசியதைக் கேட்கவில்லை. 1970-ம் ஆண்டுகூட எவரும் சிங்களவரை வெறுக்கும் வகையில் பேசவில்லை.

1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் திகதி எனது விகாரைக்கு முன்பாக நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக்கூட்டத்தில் நான்கு விதமாகப் பேசப்பட்டதைக் கேட்டேன்.

தமிழில் பேசுவதை என்னல் விளங்கிக்கொள்ள முடியும். இதனலேயே அவர்கள் பேசியதை என்னல் நன்கு அறியமுடிந்தது.

சட்டத்தரணி திரு. பாட்லெட் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

### 'நான்கூறுவதை தமிழில்கூற முடியுமா?'

சட்: நான்கூறும் தமிழ் வாக்கியங்களை உம்மால்

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்

### அரச லிகிதர் சேவைச் சங்கம் தீர்மானம்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை, இந்நாட்டில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் 58வது வருடாந்தப் பிரதிநிதிகள் மாநாட்டில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

புதிய உத்தியோகத்தர்களாக வாசுதேவ ஆதரவுச் சமசமாஜக் கட்சியினர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். தலைவராக திரு. ஜி. டி. சுமணதாச, துணைத் தலைவர்களாக திருவாளர்கள் வி. பொன்னம்பலம், ஏ. பி. விதானகே, செயலாளராக திரு. மகலாமகுணசேன, பொருளாளரா திரு. டி. பி. பித்திகல ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ம-இ)

## சமூக குறைபாடுகள் காட்டப்படும் பொது வைபவங்களை பகிஷ்கரிக்க வேண்டும்"

### தமிழர் கூட்டணி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சமூக குறைபாடுகள் காட்டப்படும் பொது லவபவங்களை, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பகிஷ்கரிக்க வேண்டும், இதனை கூட்டணி செயற்குழு அறிவிக்கவேண்டுமென நேற்று கூட்டணி காரியாலயத்தில் நடந்த சமூக குறைபாடுகள் ஒழிப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கூட்டணியின் சகல மூலக் கிளைத் தலைவர், செயலாளர் பொருளாளர் ஆகியோரை இம்மாதம் 27-ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு அழைத்து சமூக குறைபாடுகளை ஒழிப்பதற்கான திட்டங்கள் பற்றி முடிவு செய்வதெனத்தீர்மானிக்கப்பட்டது.

சமூக குறைபாடுகளை ஒழிப்பது தொடர்பான சுலோகங்களைக் கொண்டு, சுவரொட்டிகளையும், பிரசுரங்களை ஒரு மாதகாலம் வெளியிடுவதென்

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று மடுமாதா ஆவணி உற்சவம்

(மன்னர்)

மடுத்திருப்பதி ஆவணி உற்சவம் இன்று நடைபெறுகிறது. இன்று பாடற்பூசையும், மடுஅன்னையின் திருவுருவப் பவனியும் இடம் பெறும்.

## "மாணவரும் தனிநாட்டுக்கு வேலை செய்தனர்"

(கொழும்பு)

'யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களும் தனிநாட்டுக்காக வேலை செய்தனர்.

இவ்வாறு சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த வண. நந்தராம தேரோ சட்டத்தணி திரு. ஹரிச்சந்திரா விஜயதுங்க குறுக்கு விசாரணை செய்தபோது கூறினர்.

சிங்கள இளைஞர் முன்னணி சார்பில் திரு. விஜயதுங்கா சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்,

சட்: தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எப்போது இவ்வாறு சிங்கள மக்களுக்கு எதிராகப் பேசினர்கள்?

சாட்சி: தேர்தல் காலத்தில்.

சட்: அவர்களின் நோக்கம் என்ன?

சாட்சி: யாழ்ப்பாணத்திலிருந்து சிங்கள மக்களைக் கலைப்

(6ம் பக்கம் பார்க்க)

## அமிர் தம்பதிகளை உடன் அழைக்கக் கோரிக்கை

(கொழும்பு)

''சிங்கள மக்களுக்கு எதிரான, இனத்துவேஷப் பேச்சுக்களுக்குப் பொதுவாக திரு. அமிர்தலிங்கமும், திருமதி அமிர்தலிங்கமுமே காரணமாக இருந்திருக்கிறர்களென்பது சாட்சியங்களிலிருந்து தெரிகிறது. இவர்கள் இருவரும் வெளிநாடு செல்லவிருக்கிறர்கள். அவர்களைக் குறுக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தெல்லிப்பழை கே. கே. எஸ். வீதியில் தபாற் கந்தோருக்கு அருகாமையில்மின்சாரம் தண்ணீர் வசதியுள்ள அனெக்ஸுடன் கூடிய பெரிய வீட்டுடன் ஏழு பரப்பு காணி விற்பனைக்குண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல: 0057 C/o ஈழநாடு, யாழ்ப்பரணம். 0057

Hthachi Three in one (றேடியோ, றெக்கேட் பிளேயர், கசற் றெக்கோடர்) டொல்பி, சிஸ்றம் S. D. T. 7680 R ஸ்ரீறியோ, மியிசிக் சென்ரர் தேவையானோர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்க. செ. நிமலன், 10, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 0051

புத்தம் புதிய Hitachi (Three in one) 2 Speaker உடன் விற்பனைக்குண்டு. 19, கடைச்சாமி வீதி, வண்ணார் பண்ணை. 0052

கோழி தீனி வகைகள், கோழி மருந்துவகைகள், விவசாய உரவகைகள், கிருமி நாசினிகள் ஆகியன சகாய விலையில் பெற்றுக் கொள்ள விஜயம் செய்யுங்கள். சரவணு டிரேடர்ஸ், 174, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 0045

### தேவை

எலெக்ட்ரோ பிளேற்றிங்பகுதிக்கு அனுபவமுள்ள பொலிஷர்கள் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். யாழ் உலோகத்தொழிற்சாலை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0031

### வாடகைக்கு

யாழ்ப்பாணக் கச்சேரிக்கு ¼ மைல் தூரத்தில் கண்டி வீதியில் மின்சாரம், குழாய் நீர், டெலிபோன் வசதிகளோடும், நாலு படுக்கையறை, ஸ்ரோர் அறை, குசினி, இரண்டு கக்கூசு, குளியலறை, கோழிக்கூடு, மாட்டுக்கொட்டில், தென்னை மரங்களோடு கூடிய விசாலமான வீடு புரட்டாதி 1-ந் திகதி தொடக்கம் வாடகைக்கு உண்டு. 112, கண்டி வீதி, யாழ்ப்பாணம். டெலி; 7211 தொடர்பு கொள்ளவும். 0058

### கல்வி

1-9-78 — 1-9-79 மனையியற்கல்வி, தையலுக்கான புது வருட வகுப்பு 16-8-78 முதல் பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் உத்தியோகம் வகிக்கும் பெண்களுக்காகவும், இளம் தாய்மார்களுக்காகவும், பாடசாலை மாணவிகளுக்காகவும் சனிக்கிழமை வகுப்பு ஆரம்பிக்கப்படுவதுடன் தையல்கள் ஒடருக்கு செய்து கொடுக்கப்படும். விபரங்கட்கு: 426, கில்னர் கல்வி நிலையம், கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 0059

## தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

கடந்த நாட்களாக மண்ணெண்ணைக்கு இப்பகுதியில் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது ...னல் இங்குள்ள விவசாயிகளும் பொதுமக்களும் மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர். (உ)

## மானிப்பாய் பட்டினசபை மன்றம் ஆட்டிறைச்சிக்கடை கேள்வி அறிவித்தல்

மானிப்பாய் பட்டினசபை மன்ற விசேட ஆணையாளரால் மானிப்பாய் மத்திய சந்தையிலுள்ள ஆட்டிறைச்சிக் கடையை செப்ரெம்பர் மாதம் தொடக்கம் டிசெம்பர் 1978-ம் ஆண்டுவரை குத்தகைக்குக் கொடுப்பதற்கு கேள்விகள் 25-8-78 நண்பகல் 12 மணிவரையும்ஏற்றுக்கொள்ளப்படும். 23-8-78-ம் திகதி நண்பகல் 12 மணிவரை சபையால் வழங்கப்படும் கேள்விப்படிவத்தில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/- மீளளிக்கப்படாத படிவக்கிரயம் ரூபா 10/-

மேற்கொண்டு விபரங்களையும் நிபந்தனைகளையும் அலுவலக நேரத்தில் பட்டினசபை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பீ. ஜே. பாலேந்திரா
விசேட ஆணையாளர்,
மானிப்பாய் பட்டினம்.
பட்டினசபை மன்ற அலுவலகம்
மானிப்பாய்.
14-8-78. 0061

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

இல 84 அ — பிரிவுகள் 524, 532)
மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சிவகுரு மகாராசா என்பவரின் மரணசாதனத்தின்/மரணசாதனமில்லாச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
மகாராசா கைம்பெண் மனோன்மணி ''மகாபவனம்'', உடுவில், சுன்னுகம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. தத்துவ வழக்கு: 12

1. மகாராசா மகாசித்திரா
2. மகாராசா மகாநேரு
3. மகாராசா மகாமெனன்
4. மகாரர்சா மகாவேந்தன்
5. மகாராசா மகாதரன்
6. மகாராசா மகாதரிசினி
எல்லோரும் பராயமடையாதவர்கள் உடுவில், சுன்னுகம்.
7. செல்லையா கந்தையா சுன்னுகம் மேற்கு, சுன்னுகம்

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10-ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

றிச்சட் ஜெயராசசிங்கம்,
திவாளர்.

1978-ம் ஆண்டு ஆடி மாதம் 21-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. 0053

சபையில் நடந்தது

# "எதிர்க்கட்சி இல்லாத ஆட்சிமன்றம் அமையுங்கள்"

## பின்வரிசை எம்.பி.க்களுக்கு சபாநாயகர் சூடு

எதிர்க்கட்சியினர் பேசுவதற்கு உங்களால் இடமளிக்க முடியாதென்றால் எதிர்க்கட்சி இல்லாத ஒரு பாராளுமன்றத்தை அமைத்துக் கொள்ளுங்கள், ஜனாதிபதியை மேற்கோள் காட்டிப் பேசும் நீங்கள் அவரின் கொள்கைகளின்படி நடக்கிறீர்களா?

சபாநாயகர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் அரசாங்க பின்வரிசை உறுப்பினர்களைப் பார்த்துக் கடுமையான இக் கண்டனக்குரலை சபையில் எழுப்பினார்.

கடந்த அரசின் நிதி, நீதி, பொது நிர்வாக, உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா, பிரதியமைச்சர் திரு; நீல் டி அல்விஸ், முன்னாள் கொழும்பு மாநகரசபை முதல்வர் ஜனாப் பௌஸி ஆகியோர் உட்பட 35 நபர்களின் குடியியல் உரிமைகளை ரத்துச் செய்வது தொடர்பான உள்ளூர் அதிகாரசபைகள் சட்டமூலங்கள் மீதான விவாதம் கடந்தவெள்ளிக்கிழமை தேசிய அரசுப் பேரவையில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே சாபநாயகர் இவ்வாறு கூறினார்.

### நீதிமன்றத் தீர்ப்புப்பற்றி

காலை 10 மணிக்குச்சபை கூடியதும் அரசியலமைப்பு நீதிமன்றத்தீர்ப்பைப் சபாநாயகர் அறிவித்தபோது நீதிமன்றத்தீர்ப்புக்குத் தாம் மதிப்பளிப்பதாகவும் அதே வேளை அரசியலமைப்பு விதிகளின்படியே நீதிமன்றத்தால் அவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்ட சட்டமூலங்களைச் சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக்கொண்டு தாம் நிறைவேற்றப்போவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

### அமிர்-யோகேஸ் அறிக்கை

இதைத்தொடர்ந்து கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ இம்மாதம் 8ந் தேதி சபையில் நிகழ்த்திய உரை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் யாழ்ப்பாணத் தொகுதி உறுப்பினர் திரு. திரு. வெ, யோகெஸ்வரனும் தனித்தனி அறிக்கைகளைச் சபையில் விடுத்தனர். தம்மைத் தொடர்புபடுத்தி அமைச்சர் தெரிவித்தவற்றை அவர்கள் மறுத்ததுடன் இச் சபையிலன்றி வேறெங்காவது அமைச்சர் அவ்வாறு கூறியிருந்தால் அக்கூற்று தொடர்பாகத் தாம் சட்ட நடவடிக்கை எடுத்திருக்க முடியும் என்றும் இருவரும் தெரிவித்தனர்.

இங்கு அமைச்சர் கூறியவற்றை வெளியில் எங்காவது கூறும்படி தாம் அமைச்சருக்குச் சவால் விடுவதாகவும் திரு. யோகேஸ்வரன் கூறினார்.

### 'அமிர்' ஒழுங்குப்பிரச்னை

அச்சமயம் திரு. மத்தியூ சபையில் இருக்கவில்லை. அவர்களிருவரும்பேசி முடிந்த சமயமே அமைச்சர் சபையினுள் பிரவேசித்தார்.

தொடாந்து இரு சட்ட மூலங்களையும் இரண்டாம் வாசிப்புக்காகப் பிரதமர் திரு. ஆர்.பிரேமதாசா சமர்ப்பித்ததும்எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் ஒழுங்குப் பிரச்னை ஒன்றைக்கிளம்பினார்.

குறித்த இருசட்டமூலங்களுடனும் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்த இரு ஆணையாளர்களுக் கெதிராகவும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் இருவரும் உயர்நீதிமன்றத்தில் 6 வாரகால அவகாசம் கோரியிருப்பதாகவும் தெரிவித்து, இதனால் பிரதமர் சட்டமூலங்களைச் சமர்ப்பிக்க முடியாதென்பதல்ல, ஆனால் பேரவை நிரந்தரவிதி 96ன்படி நீதிமன்றத்தின் முன்னுள்ள இவ்விவகாரத்தில் உறுப்பினர்கள் சுதந்திரமாக விவாதிக்க முடியாது. அவர்களின்பேச்சுச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுமென்றும் அதனால் நீதிமன்ற விசாரணை முடியும்வரை விவாதத்தை ஒத்திவைக்கும்படியும் எதிர்க்கட்சித்தலைவர் கேட்டார்.

### தர்மலிங்கம் வலியுறுத்து

மானிப்பாய் உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் பேரவை நிரந்தரவிதி 96 ஐ இடைநிறுத்தினால்தான் விவாதத்தை நிகழ்த்தமுடியும் என்றார்,

பல குறுக்கீடுகளுக்கிடையே திரு. தர்மலிங்கம் தமது ஒழுங்குப் பிரச்னையை வலியுறுத்தினார்.

இவ்வொழுங்குப்பிரச்னைகள் தொடர்பாகப் பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில், ''முன்னைய அரசைப்போல் நாம் நீதிமன்ற அலுவல்களில் தலையிடமாட்டோம். ஆனால் நாம் இங்கு சட்டமூலங்களைத்தான் விவாதிக்கப்போகிறோமேதவிர நீதிமன்றத்தின் முன்னுள்ள

(6-ம் பக்கம்பார்க்க)

## -- மாலி --

மாநகரசபைகள் தொடர்பான முதலாவது சட்டமூலத்தின்மீது கடந்த அரசின் பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசிக்கொண்டிருந்த சமயம் அரசாங்க பின்வரிசைகளில் பலத்த கூச்சல்கள் எழுந்து கொண்டிருந்தபோதே கண்டிப்பு நிறைந்த தொனியில் சபாநாயகர் அவர்களைப்பார்த்து மேற்கண்டவாறு கூறினார்.

சபாநாயகரின் கண்டனத்தை அடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருமே கரகோஷமிட்டனர்.

முன்னாள் முக்கிய அமைச்சர் ஒருவர் உட்பட பலரின் குடியியல் உரிமைகளை ஏழு வருடங்களுக்கு ரத்துச்செய்வது தொடர்பான முக்கியமான இச் சட்டமூலங்களின் விவாதத்தில் முக்கியமான சில நிகழ்வுகள் இடம் பெற்றன.

இரு சட்டமூலங்களினதும் சில பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானவை என்று அரசியலமைபபு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தபோதிலும் அரசியலமைப்பு விதியின்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் இச்சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன.

இச்சட்ட மூலங்களை விவாதிப்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சியின் மற்றொரு சிரேஷ்ட உறுப்பினரும் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னைகள நிராகரிக்கப்பட்டன; இவ்வொழுங்குப்பிரச்னைகள் தொடர்பாக சுமார் ஒன்றேகால் மணித்தியாலத்துக்கு, சபையை இடைநிறுத்திவைக்கவும் நேர்ந்தது

இவற்றுக்கு முன்னதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவருக்கெதிராக சபையின் இளம் உறுப்பினர் ஒருவர் விடுதத சவாலும் சபையில் அன்று இடம் பெற்றது.

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. ஈடு/252
கொக்குவில் கிழக்கு, கொக்குவில் இரத்தினம் நவரத்தினம்.
— வாதி.

எதிராக

கோண்டாவில் 1. சுப்பன் நாகமுத்துவும்,
2. பெண் சின்னம்மா — பிரதிவாதிகள்

ஈடு/252 இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1978ம் வருடம் செப்டம்பர் மர்தம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை [8-9-78] முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 20,787/76 சதம் மேலும் இதில் 20000/- ரூபாவுக்கு 27-9-76 தொடக்கம் முழுத்தொகை இறுக்கப்படும்வரை வருடமொன்றுக்கு 12% வட்டியும் வழக்குச்செலவு ரூபா 603/70 சதம் மற்றும் விற்பனைக்குரிய செலவுகளும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கிறை ''கோயிற் கடவை'' நில. பர. 2 குளி 1. 6 (டி310/69) [இது 1967ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி சேவியர் சி. தம்பியினல் தயாரித்த 393ம் இலக்கப் படத்தில் நன்கு விபரிக்கப்பட்டிருக்கின்றது] இந்தப் பரப்பு இரண்டு குளி ஒன்று தசம் ஆறும் கிணறும் கல்வீடும் செய்பயிர் வானடயிர்களும், எல்லை கிழக்கு புகையிரத வீதி வடக்கு செல்வனுயகம் கைம்பெண் வீரலட்சுமியினுதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு முருகுப்பிள்ளைக்கும் பெண் அழகத்துக்குமுரிய ஆதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

சி. மகாதேவன்
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
ஏலவிற்பனையாளர்.

553, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
2?-6-78. 0060

# ஈழநாடு
The Eelanaadu

## மதுறுஓயாத் திட்டம்

மதுறு ஓயாத் திட்டத்தை ஜனுதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று ஆரம்பித்து வைத்திருக்கிருர்.

மகாவலிகங்கை அபிவிருத்தித் திட்டத்தைத் துரிதப்படுத்தும் ஏற்பாடுகளில் மதுறு ஓயாத்திட்டம் முக்கியமானது. முப்பது வருடங்களில் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை ஆறு ஆண்டுகளில் நிறைவேற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டு நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மதுறுஓயா ஆற்றின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து 48 மைல் தொலேவில் அந்த ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதன் மூலம் மதுறு ஓயா நீர்த்தேக்கம் உருவாக்கப்படவிருக்கிறது.

மதுறுஓயா நீர்த்தேக்கம் ஒன்றேகால் இலட்சம் ஏக்கருக்கு இருபோக வேளாண்மைக்கு நீர்வழங்கும், சிறு மின்சாரமும் உற்பத்தி செய்யப்படவிருக்கிறது. சிறு கைத்தொழில்களும் புதிய கைத்தொழில்களும் ஆரம்பிப்பதற்கும் இப் பிரதசத்தில் வாய்ப்பிருக்கிறது.

பலகோடிரூபாய் செலவில் மதுறுஓயாத் திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது. இதற்கு வெளிநாடுகள் உதவி செய்ய முன்வந்துள்ளன.

மதுறுஓயாத் திட்டத்தில் நாட்டின் சகல தரப்பையும் சேர்ந்த மக்களின் உழைப்பை அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இப்போதே மாணவர் பலர் அங்கு சிரமதானம் செய்து வருகின்றனர்.

மதுறுஓயாத் திட்டம் நிறைவேறியதும் வடக்கிற்கும் அந்த நீர்கிடைக்கவிருக்கிறது. வரண்ட பிரதேசத்தில் பலபகுதிகளுக்கு நீர்கிடைக்கும்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவுகாண வேண்டுமென்ற நோக்கம் நிறைவேறுவதற்கு இத்திட்டம் வழிவகுக்கும் என்பது நிச்சயம்.

மின்சார உற்பத்தியும் அதிகரிக்கும். இதன் மூலம் கைத்தொழிலும் வளர்ச்சி பெறும்.

மதுறுஓயாத் திட்டத்தில் விவசாயக் குடும்பங்கள் பல குடியேற்றப்படவிருக்கின்றன. இத்திட்டம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தது.

கல்லோயா, கந்தளாய், பதவியா முதலிய குடியேற்றத்திட்டங்கள் இன்று நன்கு முன்னேறியுள்ளன, தென்னிலங்கையிலிருந்து பல குடும்பங்கள் இத்திட்டங்களில் குடியேறி வளம்பெற்று வளம் பெருக்கியுள்ளன.

இக்குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது வடக்கு, கிழக்குமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு சென்று குடியேறுவதற்கு அக்கறை கொள்ளவில்லே.

கிளிநொச்சி, வவனியாப் பகுதியிலும்கூட வடமாகாணத்தவர் சென்று குடியேறுவதற்கு இன்னமும் உற்சாகத்துடன் முன்வருவதாக இல்லே.

வவனியா, கிளிநொச்சிப் பகுதியில் காணி பெற்ற வடபகுதியினர் அரசாங்க அலுவலகத்திலும் வேறு வியாபாரத்திலும்டு பட்டிருக்கக் கூலிக்கு ஆள்வைத்து விவசாயம் செய்து குடியேற்றத்திட்டத்தை வளர்ப்பது எப்படி.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இளைஞர்கள் சென்று குடியேறவேண்டுமென்று தலைவர்கள் வேண்டுகோள் விடுக்கிருர்கள். இளைஞர்களோ டுபாயிலும் ஓமானிலும் இடம் தேடிப் போகிருர்கள்.

மதுறு ஓயாத் திட்டத்தில் குடியேற்றப்படுபவர்களில் முதலிடம் அந்தந்தப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கே அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம், இதுவே நியதியும் ஆகும்.

இந்தச் சந்தர்ப்பத்தையும் இழந்துவிடாமல் மதுறு ஓயாத்திட்டப் பகுதியில் குடியேறி விவசாயம் மற்றும் கைத்தொழில்களில் ஈடுபட்டு நாட்டை வளம் கொழிக்கச் செய்யவேண்டிய கடமையும் தமிழ் இளைஞர்களுக்கு உண்டு.

# தெரிவுக்குழுவில்சேராததற்கு காரணம் என்ன?

## 'அமிர்' தந்த விளக்கம்

**புதிய அரசமைப்பு சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து நிகழ்த்திய உரையில் அரசமைப்புத்திருத்தம்தொடர்பாக ஆலோசிப்பதற்கு நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவில் தமிழர் விடுதலேக் கூட்டணி அங்கம் வகிக்காமல் போனதற்கான காரணத்தைத் தெளிவாக விளக்குகிருர்.**

சபாநாயகர் அவர்களே! இந்த நாட்டின் தமிழ் இனத்தின் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் அபிலாட்சைகளை நாடு முழுவதும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே நான் இந்தத் தீர்மானம் முழுவதையும் வாசித்தேன்.

அங்கத்தவர் ஒருவர்:
இப்பொழுது எங்களுக்குத் தெரியும்!

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:
இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் இத்தீர்மானத்தை எவராவது பிரசுரிப்பதைக்கூடக்குற்றமாக்கும் அவசரகாலப்பிரமாணங்கள் பிரகடனப்படுத்தப்பட்டன. இந்தத் தீர்மானத்தைப் பிரசுரிக்கக்கூடாதென்று செய்திப்பத்திரிகைகளுக்கு உத்தரவிடப்பட்டது. இதன்மூலம் இத்தீர்மானத்தை இருட்டடிப்புச் செய்யலாமென்று அவர்கள் நினைத்தார்கள். நாங்கள் சட்டத்தை மீறினேம். இருபது வருடச்சிறை, அபராதம், சொத்துப் பறிமுதல் ஆகிய தண்டனைகளைவிதிக்கும் அவசரகாலச் சட்டவிதிகளை நாம்மீறினேம். அந்தத்தடையுத்தரவை மீறி அந்தத் தீர்மானத்தை ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுங்களாக அச்சடித்தது நாடு முழுவதிலும் நாங்கள் விநியோகித்தோம். 1976ம் ஆண்டு மே மாதம் 22ம் தேதி எங்கள் உறுப்பினர் சிலர்பாதுகாப்பில் எடுத்துச்செல்லப்பட்டனர். நானும் பருத்தித்துறை பிரதிநிதி, ஊர்காவற்றுறைப் பிரதிநிதி, சாவகச்சேரிப்பிரதிநிதி ஆகியோரும் பாதுகாப்பில் எடுத்துச் செல்லப்பட்டு 'பஜெட்' வீதிக்குக்கொண்டு செல்லப்பட்டு அங்கு பத்துத் தினங்கள் தனிக்கூடுகளில் அடைத்துவைக்கப்பட்டோம்.

திரு. ஆர். ஜே. டி. டிமெல்
இவைகளெல்லாம் கடந்த காலப்பாவங்கள்,

திரு. அமிர்தலிங்கம்:
நான் வரலாற்றை எடுத்துக் கூறுகிறேன், இன்றைய விஷயத்தைப் பேசவில்லே,

திரு. அமிர்தலிங்கம்மேலும் கூறியதாவது:
நாங்கள் விடுதலே செய்யப்பட்டபின் 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றத்தில் விசாரணைக்காகக் கொண்டு வரப்பட்டோம். அதாவது அந்தக் குற்றச்சாட்டுக்களின் மீது கொழும்புமேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் முன் எங்கள் மீது விசாரணை நடைபெற்றது.

அந்த 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றத்தில் முதல்எதிரி என்ற முறையில் எனது கோரிக்கை என்னவென்பதைத் தெரிவிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். செல்லுபடியாகாத அரசிலமைப்பின் கீழும் செல்லுபடியாகாத அவசரகாலச்சட்டவிதிகளின் கீழும் அந்த நீதிமன்றம் முறையாகஅமைக்கப்பட்டதாக நான் கருதவில்லேயாதலால் எனக்கெதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நான் குற்றவாளியா அல்லது சுற்றவாளியா என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லே என்று அந்தச்சந்தர்ப்பத்தில் நான் நீதிமன்றத்துக்குக் கூறினேன். அந்த நிலேயைத்தான் நாங்கள் மேற்கொண்டோம். நான் சொன்னதுபோல் 67 ஆற்றல்மிக்க வழக்கறிஞர்கள் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கியு. ஸி., திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி., திரு. எம். திருச்செல்வம் கியூ. ஸி., திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகம் கியூ. ஸி., திரு. பி. நவரத்தின ராஜா கியூ. ஸி., திரு. ஆர். ஆர். குறசட் தம்பையா கியூ. ஸி., திரு. எஸ். ஜே. கதிர்காமர் ஆகியோர் தலைமையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த 'ட்ரயல் அட்பார்' வழக்கில் ஆஜரானுர்கள். இந்த விசாரணையின்போது எங்கள் நிலேயை நீதிமன்றத்தின் முன்னும் நாட்டின்முன்னும்அனேத்துலகத்தின் முன்னும் வைத்தோம்.

எங்கள் நிலே இரண்டு அம்சங்களைக் கொண்டது. அவசரகாலப்பிரமாணங்களின் செல்மதிக்கு நாங்கள் சவால்விட்டோம். அவசரகாலப் பிரமாணங்கள் ஒழுங்கான முறையில் பிரகடனப்படுத்தப் படவில்லேயென்று நாங்கள் கூறினேம். இந்த அம்சத்தின் மீது திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்வாதிட்டார். மற்றது அரசியலமைப்பின் செல்மதி பற்றி நாம் சவால் விட்டோம் இந்த அம்சத்தின் மீது திரு. திருச்செல்வமும், திரு. புள்ளநாயகமும் வாதிட்டார்கள். இந்தவாதங்கள் பல நாட்கள் நீடித்தன. கடைசியில் 'ட்ர்யல் அட்பார்' நீதிமன்றம். அரசியலமைப்

(5-ம் பக்கம் பார்க்க)

## பக்தியைப் பெருக்க பவுண்நகை வேண்டாம்



''ஊருக்குள்சிறந்தது நல்லூர். உலகத்தில் ஒரேஒரு நல்லூர். நல்லூரான் இருக்கும்போது நமக்குப் பயம் இல்லே'' என்று யோகசுவாமிகள் அருளியுள்ளார்கள். தேரடியில் நின்று தரிசித்தால் போதும் என்று சிந்தைகுளிரச் சொன்னவர் அவர். ''நல்லூரான் கிருபை வேண்டும். நாம் என்னுளும் பாடவேண்டும், வேறென்ன வேண்டும்'' என்று சுவாமிகள் பாடியுள்ளார். ''முருகன் வேலைத் தூக்கி விளையாடுந் தெய்வம். அவருக்கு எங்கெங்கும் திருமுகம், எங்கெங்குந் திருவிழி, எங்கெங்குந் திருச்செவி, எங்கெங்குந் திருவடி'' என்று பாடியவர். அவர் எம்மைநோக்கி, ''நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு. அதனுலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்'' என்று கூறியவர், நல்லூரிலேதான் தமக்கு ஞானம் வந்தது என்கிருர்.

ஆசானைக் கண்டேன்
அருந்தவர்வாழ் நல்லூரிற்
பேசா தனவெல்லாம்
பேசினன் — கூசாமல்
நின்றேன்நீ யாரடா
வென்றே அதட்டினன்
அன்றேயான் பெற்றேன்
அருள்.

ஆசான் செல்லப்பா சுவாமிகளின் சமாதி தேரடிக்குத் தென்புரத்தில் தெருவோரத்தில் வில்வமரத்தடியில் உள்ளது. அதனை நாம் கும்பிட்டுய்திபெறலாம்.

இன்று நல்லூர் உள்ளேயும் வெளியேயும் தனியழகும் புனிதமும்பெற்று விளங்குகிறது. முத்துக்குமாரசுவாமி எழுந்தருளியுள்ள பகுதி அலங்காரம் பெற்றுள்ளதோடு அர்த்தமண்டபம் தனியழகு பெற்று விளங்குகிறது. கொடியேற்றம் முதல் தீர்த்தோற்சவம் வரை எல்லாத் திருவிழாக்களும் முன்னிரவுக்கு முன் நிறைவுபெறும். எல்லோரும் வந்து வழிபட்டுய்யலாம். குழந்தைகளைக் கூட்டி வந்து கும்பிடப்பழக்கலாம். குப்பைகூளம்போடவும் வீதிகளில் உணவுப் பண்டக் குப்பைகளைப் போடவும் பழக்குதல் அருவருப்பான செயல். அடியார்கள் பிரதட்டை செய்து போகும்வழியில் கடலேக் கோதுகள் உடம்பில் உறுத்தும்படி வீசலாகாது.

தங்கப்பவுண் எண்ணூற்று முப்பது ரூபா விற்கிறது. வீட்டில் உள்ள நகைகளை உடம்பில் பூட்டிவந்து அழகு காட்டி விளம்பரஞ்செய்வதைக் கண்காணிப்பதற்குப் பலர் வருவார்கள். பக்தியைப் பெருக்க பவுண்நகை வேண்டாம். திருவிழாவைக் கண்டதும் வீடு திரும்புங்கள். திருவிழா மாலே ஏழுமணிக்கே நிறைவுறும். இந்த ஏற்பாடுகள் உங்கள் நன்மைக்காகவே என்பதை உணருங்கள்.

—நன்றி:
'மில்க்வைற் செய்தி'

### மணிவாக்கு

நம்கடன் செயலாற்றுதல் தான், பலன்கொடுப்பது கடவுளின் கடன்.
-விப்பின்

# நாடும் நடப்பும்

சீர்காழி கோவிந்தராஜன், மதுரை சோமு, கே. பி. சுந்தராம்பாள், தில்லானுமோகனும்பாள் புகழ் சேதுராமன்- பொன்னுச்சாமி சகோதரர்கள் வந்து யாழ்ப்பாணத்தில் கோயில் திருவிழாக்களில் இசைவிருந்தளித்துச் சென்றுள்ளனர். இன்னும் வேறு பலரும் இங்கு வரக்கூடும்.

இந்த இசை நிகழ்ச்சிகளில் இப்போதெல்லாம் சில வேடிக்கைகளைப் பார்க்கலாம். மேடையில் பக்கவாத்தியங்களையே மறைத்துவிடக்கூடிய முறையில் 'கஸட்டுகள்' அடுக்கிவிட்டிருக்கும். மேடையை நெருங்கமுடியாத பலர் ஒலிபெருக்கிகளின் கீழே ஒற்றைக் கையைத் தலேக்குமேல் உயர்த்தியபடி நிற்பார்கள். அடிக்கடி இ. போ. ச. பஸ்களில் நின்று பிரயாணம் செய்பவர்களாஞல் ஒற்றைக் கையைத் தலேக்குமேல் உயர்த்திக் கொண்டு நிற்பதில் சிரமம் இருக்காது.

கைவலித்தாலும் நிகழ்ச்சியை ஒலிப்பதிவு செய்து மறுநாள் காலேயிலேயே வீட்டிலோ, வீதியிலோ உச்சத் தொனியில் அதை ஒலிபரப்பி மற்றவர்கள் அதைப் பார்த்து, கேட்டு ரஸிப்பதில் உள்ள இன்பமேதனி!

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற இந்த மனப்பான்மை வாழ்க; வளர்க!

ஃ ஃ ஃ

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் திருச்சி வானெலி நிலேயத்திலிருந்து ''வேத வாக்கு'' என்ற ஒரு நாடகம் ஒலிபரப்பானது. ஒரு மணி நேர நாடகம். ஸ்ரீரங்கம் நரசிம்மன் எழுதியது. சினிமா நடிகர் ஏ. வி. எம். ராஜனும் நடித்திருந்தார். பக்திபூர்வமான கதைமட்டுமல்ல, படிப்பினைகள் நிறைந்தது. சினிமா மோகம், தீண்டாமை, சீதனம் ஆகிய சமூகப் பிரச்னைகளை எவ்வளவு அழகாகவும் நாசூக்காகவும் ஆனல் வசை மொழிகளில்லாமல் எழுதிய நாடகத்தை நல்ல முறையில் தயாரித்து ஒலிபரப்பியது திருச்சி வானெலி நிலேயம்.

இதுபோன்ற நாடகங்களையும் ''கஸட்'' வைத்திருப்பவர்களும், ஒலிப்பதிவு செய்து கொடுப்பவர்களும் ஒலிப்பதிவு செய்துவைத்து ஒலிபரப்புவது நமது சமூகத்துக்கு பயனுள்ளதாக இருக்கும்!

ஃ ஃ ஃ

ஒரு டாக்டர் ஒரு சுகாதாரக் கந்தோரில் உயர் பதவியிலிருப்பவர். நாளொன்றுக்கு ஐந்தாறு பாக்கெட்டுகளை ஊதித்தள்ளுவார். புகைக்காமல் அவரால் இருக்க முடியாது.

ஒரு நாள் அவரது நண்பரான சட்டவைத்திய அதிகாரி ஒருவர் அந்த டாக்டரைச் சந்திக்க வந்திருந்தார். பல விஷயங்களைப்பற்றிய பேச்சுக்களுக்கிடையில் புகைபிடிப்பது பற்றிய பேச்சும் எழுந்தது.

''நீர் புகைபிடிப்பதை இன்றிலிருந்து விட்டீரானல் உமக்கு ஐயாயிரம் ரூபாய்தருவேன்'' என்ருர், சட்டவைத்திய அதிகாரி.

''இப்போதிருந்தே விடுகிறேன்'' என்ருர் டாக்டர். அப்படியே அவர் புகைப்பதை நிறுத்தி பத்து நாட்களுக்கு மேலாகிவிட்டது.

ஐயாயிரம் ரூபாய் பந்தயம் இன்னமும் இருக்கு.

இதுபற்றிய தகவலேச் சொன்ன எனது நண்பரிடம், 'டாக்டர் இரகசியமாகப் புகைபிடித்தால்...'' என்று கேட்டேன்.

இருவரும் மனச்சாட்சிக்கு மதிப்பளிப்பவர்கள்; அப்படியெல்லாம் செய்யமாட்டார்கள் என்ருர்.

ஃ ஃ ஃ

மற்ருெரு டாக்டரும் சங்கிலித் தொடர் புகைபோக்கி

(4ம் சலம் பார்க்க)

(5ம் சலத் தொடர்ச்சி)

யாக இருந்தவராம். சில மாதங்களாகப் புகைபிடிப்பதையே விட்டு விட்டாராம். புகைபிடிப்பதை நிறுத்திய இரண்டு மூன்று நாட்களுக்குள் நோயாளியை விட்டு, அவருக்கு உதவியாக வந்தவருக்கு வைத்தியம் செய்ய எத்தனித்தாராம், இப்போதெல்லாம் புகையைப்பற்றிக் கவலேயில்லாமல் வழமைபோல் தமது பணியைச் செய்கிருராம்!

--ஊர்சுற்றி

# கொலை தீவைப்பு தவிர்ந்த வழக்குகள் யாவும் வாபஸ்

## முதல்வர் எம். ஜி. ஆர். முடிவு

சென்னை, ஆக. 14

விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்கள்மீதான பாரதூரமான குற்றச்சாட்டுகள் தவிர்ந்த ஏனைய வழக்குகள் வாபஸ்பெறப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இதனை அவர் நேற்றிரவு சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள 111 வழக்குகளில் பாரதூரமானவை எனக் கருதப்படும் 21 வழக்குகள் தவிர்ந்த 90 வழக்குகளும் தமிழக அரசினால் வாபஸ் பெறப்படும் என அவர் அறிவித்தார். மாணவர்களுக்கு எதிரான வழக்குகளில் பஸ்களை எரித்த குற்றச்சாட்டுக்களின் பேரிலான 7 வழக்குகள் தவிர மற்ற சகல வழக்குகளும் வாபஸ்பெறப்படும் என்றும் முதல்வர் கூறியுள்ளார்.

தொழிலாளர்களுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்குகளில் தீவைத்தல், கொலை முதலான குற்றச்சாட்டுக்கள் தவிர்ந்த ஏனைய வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்றும் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட, வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகையில் பதவி நீங்கவேண்டிய அவசர தீர்மானம் சட்டமாக்கப்படாது என்றும் திரு. எம். ஜி. ஆர். மேலும் தெரிவித்தார். (உ)

### கற்கோவளத்தில் வீடமைப்புத் திட்டம்

(பருத்தித்துறை)

தொகுதிதோறும் ஐந்துவீடுகளை அமைக்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறைத் தொகுதியில் கற்கோவளம் என்னுமிடத்தில் கட்டிடத் திணைக்களத்தினால் வீடு அமைக்கும் வேலை ஆரம்பமாகியுள்ளது. இவ்வேலைகளைச் செய்வதற்கு கட்டுவேலை, மரவேலைத் தொழிலாளர்கள் தேவைப்படுவதாகவும், இவ்வேலைகளில் அனுபவம் உள்ளோர் தம்முடன் தொடர்புகொள்ளும்படி பருத்தித்துறை எம். பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.



### ஜே.பி.யாக நியமனம்

கைதடி இலங்கை சைவ அநாதை இல்லத்தின் உபதலைவர் திரு. க. தம்பிப்பிள்ளை நீதிஅமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை சைவ அநாதைஇல்லம் கைதடி நாவற்குழி கிராமசபை கைதடி இந்துவாலிபர்சங்கம் ஆகியவற்றின் தலைவராக இருந்தவர் அத்துடன் கைதடி ஸ்ரீவீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானம் கைதடி இணக்கசபை அகில இலங்கை இந்துமாமன்றம் இலங்கை இந்துஇளைஞர் பேரவை ஆகியவற்றின் செயற்குழு உறுப்பினராவும் இருந்துள்ளார்.

# அரசியல்கட்சிகள் இணைந்த புதிய அரசு அமைக்கப்படும்

## பாக். இராணுவ நிர்வாகி அறிவிப்பு



ராவல்பிண்டி, ஆக14

பாகிஸ்தானில் அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

இத்தகவலை பாகிஸ்தானின் இராணுவச் சட்டநிர்வாகி ஜெனரல் ஷியாவுல் ஹக் வெளியிட்டுள்ளார்.

இந்தவகையில் ஜெனரல் ஹக் பாகிஸ்தானின் ஏழு கட்சிகள் அடங்கிய தேசிய கூட்டணியை எதிர்வரும் புதன்கிழமை சந்தித்து உரையாடவிருக்கிறார் என ராவல்பிண்டி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பாகிஸ்தான் ஜனாதிபதி சௌத்திரியின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடைந்தது.

எனினும் இவரது பதவிக்காலம் நீடிக்கப்படுமா என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (உ)

### புற்றுநோய் ஆபத்து

வர்ஷிங்டன், ஆக. 14

ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழியிறைச்சி, மீன் என்பன பழுதடையாமல் இருப்பதற்காகப்பாவிக்கப்படும் 'நைற்றைட் அமிலம்' புற்றுநோயைதோற்றுவிக்கக்கூடும் என்று அமெரிக்காவிலுள்ள ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. (உ)

### எம். ஜி. ஆர். உதவி

சென்னை. ஆக. 14

கரூரில் வீடு ஒன்று இடிந்து விழுந்ததால் மூன்று குழந்தைகள் பலியான குடும்பத்திற்கு தமது நிவாரண நிதியிலிருந்து 2000 ரூபா வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் முடிவுசெய்துள்ளார். (உ)

## தமிழ் பேசும் தபால் தந்தி ஊழியர் சங்கம் அமைத்தனர்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ்பேசும் தபால்தந்தி ஊழியர்சங்கம் யாழ். ஆனைப்பந்தி உயர் சங்க கல்லூரி மண்டபத்தில் வைத்தியகலாநிதி பாலசிங்கம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இவ் வைபவத்தில் வண்ணார்பண்ணைத் தபால் அதிபர் திரு. வி. எஸ். தங்கவடிவேல், சட்டத்தரணி திரு. ரி. சோமசுந்தரம், திரு. தங்கவேலாயுதம் (எழுதுவினைஞர்பிரதேசக்கணக்காளர் காரியாலயம்), திரு. ஈ. சுப்பிரமணியம் (மேற்பார்வை அதிகாரி யாழ் அஞ்சலகம்) ஆகியோர் கலந்து சிறப்புரையாற்றினர்கள். இச் சங்கத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: அ. அரசகுமார் (வடபெரும்பாகஅத்தியட்சகர் காரியாலயம் யாழ்ப்பாணம்), செயலாளர்: த. நவரத்தினம் (அஞ்சலகம் யாழ்ப்பாணம்), தனாதிகாரி: இ. துரைரத்தினம் (அஞ்சலகம் யாழ்ப்பாணம்), உபதலைவர்கள்: ப. புவனேந்திரன் (அஞ்சலகம் கரவெட்டி), செ. அந்தோனிசாமி (அஞ்சலகம் ஊர்காவற்றுறை), உபகாரியதரிசி: கு. விநாயகசுந்தரம் (அஞ்சலகம் வல்வெட்டித்துறை).

நிர்வாகசபை உறுப்பினர்கள்: த. சுந்தரலிங்கம் (அஞ்சலகம் அச்சுவேலி), ஆ. கருணாகரன் (அஞ்சலகம் வேலணை), து. விக்னேஸ்வரன் (அஞ்சலகம் சுன்னாகம்), ஆ. இராமநாதன் (அஞ்சலகம் நெடுந்தீவு) ந. சபாரெத்தினம் (அஞ்சலகம்வட்டுக்கோட்டை) செ. மகாதேவன் (அஞ்சலகம் மானிப்பாய்), இ. பரமேஸ்வரலிங்கம் (அஞ்சலகம் கொக்குவில்), செ. திருஞானசுந்தரம் (அஞ்சலகம் கரவெட்டி), பா. பயஸ்கயசிந் (அஞ்சலகம்வண்ணார்பண்ணை) பொ. மகேஸ்வரன் (அஞ்சலகம் யாழ்ப்பாணம்), வ. தம்பித்துரை (அஞ்சலகம் யாழ்ப்பாணம்).

பிரதமகணக்காய்வாளர்: நா. தங்கராஜா (யாழ். அஞ்சலகம்).

பலகாரியாலயங்களிலிருந்தும் பெருந்திரளான ஊழியர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். (அ)

### பிரேமிலா இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அளிக்கும் செல்வி எம். பிரேமிலாவின் கர்நாடகஇசைவிருந்து யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அடுத்த மாதம் 2-ம் தேதி நடைபெறவிருக்கிறது.

சங்கீதவித்துவான்கள் முசிரி சுப்பிரமணிஐயர் ரி. கே. கோவிந்தராவ் சங்கீதகலாநிதி முடிகொண்டான் வெங்கடராம ஐயர் ஆகியோரிடம் முறையாக சங்கீத சிட்சை பெற்ற செல்விபிரேமிலா தமிழ் இசைச்சங்கம் இந்திய நுண்கலைச் சங்கம் மியூசிக் அக்கடமி ஆகியவற்றின் ஆதரவில் சங்கீதக்கச்சேரிகளை நடாத்திப் பாராட்டைப் பெற்றிருக்கிறார். அகில இலங்கை வானொலியிலும் சங்கீத கச்சேரிகளை நடாத்துகின்றார்.

செல்வி பிரேமிலா யாழ்ப்பாணக்கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் அமரர் சி.ஒ. எலாயஸின் பேத்தியாவார்.

யாழ். வளாகம் முன்னர் சுவீகரித்திருந்த பாடசாலைக் கட்டிடங்களை மீண்டும் யாழ்ப்பாணக்கல்லூரிக்கே கையளித்ததை அடுத்து யாழ்ப்பாணக் கல்லூரியை வளர்ச்சியுறச் செய்யுமுகமாகவே இந் நிகழ்ச்சி இடம்பெறுகிறது. (க--அ)

## ஈ. வெ. ரா.வுக்கு தபால்தலை: மத்திய அரசு முடிவு

சென்னை, ஆக. 14

பெரியார் ஈ. வெ. ராமசாமியின் 100வது பிறந்த நாள் விழாவை செப்டம்பர் மாதம் 26ம் திகதி முதல் ஒரு வருடத்திற்கு கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

பெரியாரைக் கௌரவிக்கு முகமாக நூற்றாண்டுவிழாவையொட்டி தபால் தலை ஒன்றை வெளியிடவும் மத்திய அரசு தீர்மானித்துள்ளது. (இ)

### ஈரானில் ஊரடங்கு உத்தரவு:

## கலவரத்தில் 7 பேர் பலி; 240 பேர் காயம்

லண்டன், ஆக. 14

ஈரானில் மேலும் மூன்று நகரங்களுக்கு ஊரடங்குச் சட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

ஈரானில் ஏற்பட்ட கலவரங்களில் 7 பேர் மாண்டதாகவும் 240 பேருக்குமேல் காயமுற்றதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கம்யூனிஸ்ட்டுகளே இக்கலவரத்திற்குக் காரணம் என்று ஈரானிய மன்னர் அறிவித்துள்ளார்.

பந்தோபஸ்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (உ)

### முதல்வர் எம். ஜி. ஆர் வேண்டுகோள்

சென்னை, ஆக. 14

விவசாயிகள் நாட்டின் வளத்திற்கு உழைக்கவேண்டிய அதேவேளை மாணவர்கள் தம் பொறுப்பை உணர்ந்து நற்பிரஜைகளாக வாழவேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

### விரிவுரை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு பிள்ளையார் கோயிலில் தினமும் இரவு ஞானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மா பாகவதரின் பக்கவாத்திய சகிதம் கந்தபுராண விரிவுரை தொடர்ந்து நிகழ்த்த[illegible] வருகி[illegible]து மே[illegible] [illegible]டி விரிவுரை ஆவணி சதுத்தியன்று [illegible]த்தியாகும். (உ)

### விவசாயிகள் தினவிழா

[பண்டத்தரிப்பு]

காங்கேசன்துறைத்தொகுதி இளம் விவசாயிகள் கழகங்கள் இணைந்து நடத்தும் இளம் விவசாயிகள் தினவிழா இம்மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கீரிமலைகமத்தொழில் சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் கலந்து கொள்வார். யாழ். மாவட்ட விவசாய சேவை அதிபர் திரு. நா. சிவமுத்துலிங்கம் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க[illegible]பகாதேவா, வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதி[illegible] திரு கே. கோபாலரத்தினம். கீரிமலை விவசாய பே[illegible]த[illegible]சிரிய[illegible] திரு. ச. அப்புத்துரை ஆகியோரும் இவ் விழாவி[illegible] உரை நிகழ்த்துவார்[illegible] க[illegible] [illegible]ொலி- விவசாய அறிவுப்போட்டியும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (உ)

# பாலஸ்தீன விடுதலைஇயக்க தலைமையகத்தில் குண்டு வெடிப்பு

## 70 பேர் வரை பலி!

லண்டன், ஆக. 14

பெய்ரூட்டில் உள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமையகம் அமைந்திருக்கும் 9 மாடி கட்டிடத்தில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் 70பேர் இறந்ததாகவும் சுமார் நூறுபேர் காயமுற்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பினால் மாடிக்கட்டிடத்தின் ஒருபதி இடிந்து விழுந்துள்ளதாகவும் இந்த இடிபாடுகளுக்குள் சிக்கியே பலர் இறந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

பாலஸ்தீன இயக்கத்தலைவர் ஜனாப் யாஸிர் அரபாத்து கு எதிரான கொரில்லாக்களே இக்குண்டை மாடிக்கட்டிடத்திற்குள் வைத்துச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
NOT NOW COMRADE

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
விஜயகுமார்
கே. ஆர். விஜயா
ஜானகிசபதம்

**நாகம்ஸ்**
(சுன்ஞகம்)
தினசரி 6-45, 10-00
சிவாஜி - கே.ஆர்.விஜயா
ராமன் எத்தனை ராமனடி

## ரமலான் சிந்தனைகள்

''எனது அடியார்களில் எனக்கு மிகவும் பிரியமானவர்கள் நோன்பு திறப்பதில் துரிதப்படுத்துபவர்களாகும்'' என அல்லாஹுத ஆலா திருவுளமானதாக எம்பெருமானர் ஸல்லல்லாஹு அலைவஹிவஸல்லம் அவர்கள் நவின்ருர்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: திர்மதி.

''நோன்பு திறக்கத் துரிதப்படும் காலமெல்லாம் மக்கள் ஷேமமாகவே வாழ்வர்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் நவின்ருர்கள்.

அறிவிப்பவர்: ஸஹ்லு(ரலி)
நூல்: புஹாரிமுஸ்லிம்.
தொகுப்பு: ஏ. சி. எம். மஸ்ஹுர் - யாழ்நகர்.

இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
**மனேகரா** (யாழ்ப்பாணம்)
சிவாஜி - ஜெயலலிதா நடித்த
கலாட்டா கல்யாணம்
நாளைமுதல்: மகாதேவி

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - பத்மினி
நடித்த
அரசிளங்குமரி
(புதியபிரதி)

**REGAL** Jaffna
Daily 10-30 a. m., 2-00, 4-30, 7-00, & 9-30 p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** யாழ்நகர். போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45காட்சிகள்
நாதம் கேட்குதடி நல்லூர் நாதன்......
கோபுர ஆலய மணியின் நாதம் கேட்குதடி
3 வது வாரம்
ரகுநாதன்... குமுதினி ...சந்திரகலா... தனரத்தினம்
நடிக்கும்
தெய்வம் தந்த வீடு (சினிமாஸ் கோப்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞயிறு 4 காட்சிகள்
பூவும் பொட்டும்

**லிடோ** (யாழ்.நகர்)
போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
அருணகிரிநாதர்

## இன்றைய இராசிப்பலன்

ஆடிமாதம் 30-ந் திகதி
செவ்வாய்க்கிழமை
(15-8-78)

**மேடம்:-** கலையுலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் பரவும், சிலர் புதிய வாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்தவும். வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

**இடபம்:-** உறவாடிக் கெடுப்பதற்கும் பகையாளிகள் வருவர், உற்சாகம் குன்றும், பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும், சிலருக்கு உஷ்ண ரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

**மிதுனம்:-** பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், சுற்றுடலிலும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும், இன்று பொன்னுள்.

**கடகம்:-** குடும்பத்தில் குறைகேட்க நேரிடும், மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகலாம், சிலருக்கு விரக்திமனப்பான்மையும் தென்படும். பொறுமைநன்று.

**சிங்கம்:-** மனம்போல் வாழ்வு இன்று மலரும், கடமையாற்றும் இடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். முயற்சியால் முன்னேற்றத்திற்கு மிடமுண்டு.

**கன்னி:-** புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும், கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு, புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருப்பப்படலாம், பணபலமும் உண்டு.

**துலாம்:-** வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும், சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும், புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும், பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:-** துன்பத்தின் ரேகைகள் படரும், எதிலும் தயக்கம் ஏற்படும், ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும், கடன் தொல்லை அதிகரிக்கலாம். நிதானம் வேண்டும்.

**தனுசு:** அதிக ஆசையினுல் அவஸ்தைப்படுவீர்கள் சிலர் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக்கொள்ளலாம், சிலரின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும், அமைதி நன்று.

**மகரம்:-** பெரிய இடத்துச் சிநேகிதம் இன்று ஏற்படலாம், சிலருக்கு அரசியலிலும் ஆக்கம் பிறக்கும், புதுவழிகளின் மூலம் பணம் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு.

**கும்பம்:-** மனையில் பூசல்கள் தோன்றி மறையும், தனிமையை விரும்புவீர்கள், தொழில்புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலைகள் நடைபெறும், நண்பர்களே சூழ்ச்சிவலை விரிப்பதற்கு முற்படுவார்கள்.

**மீனம்:-** மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள், பயன்தரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம், அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும், அறவழி நாட்டமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# தெரிவுக் குழுவில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பின் செல்மதி பற்றிய பிரச்னை என்றும் அதனுல் அது பற்றித் தீர்ப்பளிப்பதற்கு இந்த நீதிமன்றத்தைக் கோரமுடியாது என்றும் கூறியது, இந்தப் பிரச்னையில் இப்படிக்கூறியநீதிமன்றம் அவசரகாலச்சட்டம் முறையாகப் பிரகடனப்படுத்தப்படவில்லையென்றும் அதனுல் அவசரகாலச் சட்டவிதிகள் செல்லுபடியாகாதவை என்றும் இதனுல் அவசரகாலச் சட்டப்பிரமாணங்களின் கீழ் ''ட்ரயல் அட்பார்'' என இந்த நீதிமன்றமும் முறையாக அமைக்கப்படவில்லையென்றும் ஆகவே என்னை விசாரணைசெய்வதற்குத் தங்களுக்கு அதிகாரமில்லையென்றும் தெரிவித்து என்னை விடுதலை செய்தனர். மற்றும் மூன்று எதிரிகளுக்கு எதிரான மற்றைய குற்றச்சாட்டுகளுக்கும் இதுவே நடந்தது.

அரசாங்கம் இந்த விஷயத்தை உயர்நீதிமன்றத்திற்கு மேல்முறையீடுசெய்தது. இதில் வேடிக்கை என்னவெனில் உயர்நீதிமன்றத்தில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதோ அதற்கு சிறிது முன்னரோ' எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை வாபஸ்பெறுவதற்குஅரசு உத்தேசித்திருப்பதாகவும் எனவே தாங்கள் இக்குற்றச்சாட்டுக்களைத் தொடரப் போவதில்லையென்றும் ஆகவே சட்டப் பிரச்னையில் அதன் விளைவுகள் எந்த வகையிலும் எங்கள்மீது வந்துசேராதவகையில் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பைக் கொடுக்கலாமென்றும் சட்டமா அதிபர்உயர்நீதிமன்றத்துக்குத் தெரிவித்திருந்தார். எப்படியென்ருலும் மொத்தத்தில் நாங்கள் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டோம். அத்துடன் அந்த வழக்கும் முடிந்தது.

இந்தத்தீர்மானத்தின் (வட்டுக்கோட்டைத் தீர்மானம்) அடிப்படையில்தான் நாங்கள் தேர்தலுக்குச் சென்றேம். அவர்களுடைய சுதந்திரத்தை மீண்டும் பெற்றுத்தருவதற்கு எங்கள் மக்களிடம் கட்டளை கேட்டுச்சென்றேம். அந்தக் கட்டளையின் மீதுதான் நாங்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டோம்.

அரசியல் அமைப்பின் இரண்டாவது திருத்தம் சம்பந்தமாக நாங்கள் பெற்ற கட்டளையைக் கருதியும் நாங்கள் மேற்கொண்ட நிலையைக் கருத்தில் கொண்டும், அரசியல் அமைப்பின் திருத்தம் மீதான விவாதத்தில் நாங்கள் பங்கு பற்றவில்லை என்பதை நாங்கள் தெரிவித்துக் கொண்டோம்.

இந்த அரசாங்கம் அரசியலமைப்பைத் திருத்துவதற்கு ஒரு தெரிவுச்குழுவை நியமிக்கும் ஆலோசனையை முன்வைத்தபோது, தெரிவுக்குழு சம்பந்தமாக எங்கள் நிலையை தக்க சமயத்தில் தெளிவுபடுத்துவோம் என்று நாங்கள் தெரிவித்திருந்தோம். பின்னர் நாங்கள் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதாக இல்லையா என்பது பற்றி ஒரு முடிவுஎடுக்க வேண்டியிருந்தது.

நான் முன்னர் சொன்னது போல 1970ம் ஆண்டில் அரசியல் நிர்ணயசபையில் பங்கு பற்றுவதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். ஒரு சமரசத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தமிழ்பேசும் மக்களுக்கு குறைந்தபட்ச உரிமைகளையாவது உறுதிப்படுத்தி ஒரு தீர்வுகாண்பதற்கான சாத்தியத்தை ஏற்படுத்த முனைந்தோம். இதில் நாங்கள் தோல்விகண்டதும் அரசியல் நிர்ணய சபையுடனுன தொடர்பை நாங்கள் துண்டித்துக்கொண்டோம்.

தெரிவுச்குழு விஷயத்தில், நாங்கள் தெரிவுக்குழுவுக்கு ஒருபோதும் போவதில்லையென்றுமுடிவு செய்தோம், ஏனெனில் தமிழ்பேசும் மக்களின் பிரச்னைக்கு எப்படித் தீர்வுகாணப்போவதாக அரசாங்கம் கூறியதோ அந்த வழியில் அரசாங்கம் தமிழ் பேசும்மக்களின் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கான ஆக்கம் எதையும் செய்யவில்லையென்று நாங்கள் கருதினேம். மனச்சாட்சியின் அடிப்படையில் தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்னைக்குத் தீர்வுகாணப் போவதாகவும் முன்னரே சொன்னதுபோன்று சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டி அதன் முடிவை அமுல்செய்யப் போவதாகவும் அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தனது கொள்கை அறிக்கையிலும் தெரிவித்திருந்தது. உண்மையில் அரசியல் அமைப்பு சம்பந்தமாக அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள பந்தியில் கூட, சிங்களம் பேசாதமக்களின் பிரச்னைகளை ஆராய்வதற்காகக் கூட்டப்படும் சர்வகட்சி மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகள் அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று அவர்கள் கூறியிருந்தனர். எனவே இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு ஒரு அடிப்படையாக ஒருவழிமுறையை உருவாக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் ஒருசர்வகட்சி மாநாட்டை கூட்டியிருக்கலாம் அல்லது எங்களுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்திருக்கலாம். இவ்விதம் செய்திருந்தால், அரசாங்கத்தின் ஒரு திட்டத்தை அது சம்பந்தப்பட்ட அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு நாங்களும் தெரிவுக்குழுவில் போயிருப்போம். ஆனுல் துரதிர்ஷ்டவசமாக அரசாங்கம் தவருன வழியில் அதை அமைத்துக்கொண்டது. அவர்களுக்குச் சொந்தக்காரணங்களிருக்கலாம், மற்றைய அரசியல் கட்சிகள் காட்டிய சில போக்குகள், அல்லது வேறு காரணங்களும், அரசியலமைப்பை உருவாக்குவதற்கு முன்னர் இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாண்பதற்கு முயற்சி செய்வதில்லை என்றமுடிவுக்குவரக்காரணமாயிருக்கலாம். இதுதான் நாங்கள் தெரிவுக்குழுவுக்குப் போவதில்லையென்று தீர்மானித்ததற்குக் காரணமாகும்.

(தொடரும்)

## விடியும் வரை உவகை தந்த ஒரு விழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ கணேசவித்தியாலயத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழாவும், கலைவிழாவும் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. குகதாசன் விழாவிற்குத் தலைமை வகித்தார். பிரதமவிருந்தினராக திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. யும் சிறப்பு விருந்தினராக வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. தி மணிக்கவாசகரும் கலந்துகொண்டனர்.

மாலை 6 மணிக்கு திறப்பு விழாவும், இரவு 8-30 மணிக்கு பொதுக்கூட்டமும், கலைநிகழ்ச்சிஞம் அம்பலவாணர் அரங்கில் இடம் பெற்றன. வித்தியாலய அதிபர் திரு. நா. கார்த்திகேசு தமது உரையில்,

''வித்தியாலயத்தின் இட நெருக்கடி, அவசிய தேவைகள் ஆகியனபற்றிக் குறிப்பிட்டதோடு அறிக்கையொன்றையும் சமர்ப்பித்தார்.

வித்தியாலயத்திற்கு உதவி வழங்க முன்வந்த திரு. மு. குமாரசாமி, திரு. க. நல்லதம்பி ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. முதலில் நடைபெற்ற இயல் அரங்கில் சட்டத்தரணி திரு. ஆ. ச. நடராஜா தலைமையில் ''சமுதாய வளர்ச்சியில் சட்டம் அவசியமா'' என்ற தலைப்பில் இடம் பெற்ற பட்டிமன்றத்

(6-ம் பக்கம் பார்க்க)

## விடியும்வரை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன், திரு. வை. லோகநாதன், புலவர் ஈழத்துச்சிவானந்தன், திரு. க. சிவராமலிங்கம், திருமதி வ. நடராஜா, திரு. மு. இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பின்னர் நடந்த இசையரங்கில் சங்கீத பூஷணம் திரு. நா. பரமேஸ்வரனின் இன்னிசைக் கச்சேரி இடம்பெற்றது. தொடர்ந்து மாவை மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இறுதியாக இடம்பெற்ற நாடக அரங்கில் பழைய மாணவர்களின் ''கொழும்போ கொழும்பு'' என்ற நாடகம் உட்பட நான்கு நாடகங்கள் இடம்பெற்றன. இவ்விழா ஆயிரக்கணக்காேனாருக்கு விடியும் வரை விருந்தாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. விழாவிற்கான நிகழ்ச்சிகளை வித்தியாலய உப அதிபர் திரு. க. திருச்செல்வம் ஒழுங்கு செய்திருந்தார். ஆசிரியர் திரு. பொ. சபாரத்தினத்தின் நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.

## எதிர்க்கட்சி...

[2-ம் பக்கதொடர்ச்சி]

அந்த ஆணையாளர்களின் அறிக்கைகளையல்ல'' என்றார்.

அந்த அறிக்கைகள் பற்றிக் குறிப்பிடாது இச்சட்ட மூலங்களில் பேசமுடியாது என்றார் திரு. அமிர்தலிங்கம்.

தற்போதுள்ள திருமதி சிறிமாவோவின் அரசியலமைப்பின்படி இப்பேரவையைக்கட்டுப்படுத்தக்கூடிய ஒரே ஒருநீதிமன்றம் அரசியலமைப்பு நீதிமன்றமேயென்றும் உயர்நீதிமன்றம் தனது கடமையைச் செய்யட்டும், நாம் எமது கடமையைச் செய்வோமென்றும் பிரதமர் கூறினார்.

அப்போது திரு. தர்மலிங்கம், அரசியலமைப்பு விதியின் பிரிவுகள் 2, 3, 4 ன்படி பேரவை அதிகாரம், சிறப்புரிமைகள் பற்றியே சபையில் அவ்வாறு வாதிடமுடியும் என்றார்.

### நீதிமன்றத்தைப் பரிகசிக்கக்கூடாது

வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நீதிமன்றத்தீர்ப்புக்காகப் பேரவை நடவடிக்கையை ஒத்திவைக்க முடியாது என்றபோது, சாவகச்சேரி உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் நீதிமன்றத்தை பரிகசிக்கக் கூடாது என்றார்

இவ்வொழுங்குப் பிரச்னைகள் மீது தாம் ஆராய்ந்து தீர்பளிப்பதற்காகப் சபையை 15நிமிடங்களுக்குஒத்திவைப்பதாகக் கூறி காலை 10-35க்கு சபாநாயகர் சபையை ஒத்திவைத்தார்.

ஆனால் சபை மீண்டும் 11-54க்குத்தான் கூடியது.

### சபாநாயகர் தீர்ப்பு

நீண்ட நேர ஆலோசனையின் பின், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரையும் தனது அறைக்கு அழைத்து அவர்களுடனும் கலந்துரையாடியபின் சபாநாயகர் தமது தீர்ப்பை அளித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னைபற்றி தாம் அவதானமாக ஆராய்ந்ததாகவும் அரசியலமைப்பு விதிகளின் படி அரசாங்கம் தான் கொண்டு வர விரும்பும் சட்டமூலத்தை விவாதிக்க முடியும் என்றும் அதனால் இவ்வொழுங்குப் பிரச்னையை நிராகரிப்பதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

சபாநாயகரின் தீர்ப்பைத் தொடர்ந்து பிரதமர் முதலாவது சட்டமூலம்மீதான விவாதத்தைத் தொடக்கிப் பேசினார்.

இச்சட்டமூலம் ஜனாப் பௌஸி, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, முன்னாள் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஜனாப் முகம்மது சரூக், கொழும்பு மாநகரசபை முன்னாள் மதிப்பீட்டாளர் ஜனாப் சதீக், நீர்கொழும்பு மாநகர சபை முன்னாள் ஆணையாளர் திரு. என். குணசேகரா, தெகிவளை, கல்கிசை மாநகர சபை முன்னாள் தொழில் நுட்ப உதவியாளர் ஜோசப் பேரேரா, இரத்தினபுரி மாநகரசபை முன்னாள் முதல்வர் திரு. உபாலி ராஜபக்ச, இரத்தினபுரி மாநகரசபை முன்னாள் உறுப்பினர் திரு. பர்சன் சமரவீர ஆகிய எண்மருக்கு குடியியல் தகுதியீனங்களை விதித்தல் தொடர்பானது. (அ)

# தேசிய சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு தேசிய லொத்தர் சபையில் 12-8-78ல் இழுக்கப்பட்ட 674-வது சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு;

**முதலாவது பரிசு**
**02 P 0446**
**ரூபா 100,000**

**இரண்டாவது பரிசு**
**08 G 0554**
**ரூபா 40,000**

**மூன்றாவது பரிசு**
**03 F 0441**
**ரூபா 10,000**

ரூபா 1,717-50 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| 02 A 0928 | z6 A 0586 |
| 32 A 0274 | |
| 24 B 0353 | 29 B 0632 |
| 01 C 0919 | 09 C 0057 |
| 13 C 0306 | 17 C 0781 |
| 21 C 0925 | 23 C 0573 |
| 28 C 0206 | 33 C 0402 |
| 03 D 0235 | 09 D 0054 |
| 13 D 0541 | 14 D 0745 |
| 24 D 0037 | 33 D 0470 |
| 01 E 0398 | 07 E 0867 |
| 21 E 0645 | 27 E 0663 |
| 02 F 0761 | 03 F 0150 |
| 25 F 0890 | |
| 13 G 0516 | 23 G 0032 |
| 30 G 0495 | |
| 19 H 0949 | 24 H 0434 |
| 26 H 0644 | 30 H 0617 |
| 32 H 0484 | |
| 01 J 0793 | 02 J 0430 |
| 06 J 0725 | 08 J 0617 |
| 11 J 0990 | 14 J 0959 |
| 17 J 0118 | 19 J 0780 |
| 08 K 0188 | 11 K 0459 |
| 17 K 0444 | 24 K 0538 |
| 32 K 0353 | 11 L 0102 |
| 17 M 0881 | 18 M 0846 |
| 24 M 0956 | 30 M 0501 |
| 01 N 0519 | 05 N 0358 |
| 19 N 0455 | 31 N 0253 |
| 04 O 0575 | 10 O 0957 |
| 11 O 0541 | 08 P 0797 |
| 17 P 0914 | 03 Q 0027 |
| 07 Q 0136 | 13 Q 0193 |
| 09 R 0892 | 11 R 0294 |
| 12 R 0443 | 15 R 0290 |
| 15 R 0801 | 31 R 0076 |
| 02 S 0560 | 13 S 0772 |
| 17 S 0335 | 27 S 0473 |
| 21 U 0939 | 21 U 0988 |
| 29 U 0690 | 14 V 0932 |
| 15 V 0428 | 15 V 0821 |
| 18 V 0124 | |
| 24 V 0461 | 30 V 0402 |
| 32 V 0316 | 05 W 0659 |
| 06 W 0340 | 11 W 0218 |
| 15 W 0019 | 20 W 0636 |
| 28 W 0634 | 28 X 0573 |
| 28 X 0603 | |
| 33 X 0782 | 25 X 0662 |
| 12 Y 0207 | 05 Y 0940 |
| 30 Y 0963 | 07 Z 0383 |
| 07 Z 0099 | 12 Z 0653 |

## நாட்டைப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழில் கூற முடியுமா?

சாட்சி: முடியாது; தமிழை சிங்களத்திலும் சிங்களத்தை தமிழிலும் மொழிபெயர்க்கும் திறமை எனக்கு இல்லை. பேசும்போது தமிழை என்னால் விளங்கிக் கொள்ள முடியும்.

கூட்டத்தில் அவர்கள் பேசிய பேச்சுக்களினால் நான் பயப்படவில்லை. எங்களை அவமதிப்பதற்காகலே அவர்கள் அவ்வாறு பேசினார்கள். அதனாலேயே அது பற்றி பொலிசாரிடம் புகார் செய்யவில்லை.

அங்கிருந்த பொலிசார் இதை பதிவுசெய்துகொண்டனர்.

கலவரத்தின் பின் பிரதமரைச் சந்திக்க வந்தேன். பிரதமரின் வேண்டுகோளின்படி அவரின் மேலதிகச் செயலாளர் திரு. தர்மபாலாவைச் சந்தித்தேன்.

நான் எந்தக் கடிதத்தையும் பிரதமருக்கோ பாதுகாப்பு அமைச்சருக்கோ எழுதவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணிக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் விகாரை உடைக்கப்படும். சிங்கள மகாவித்தியாலயம் தாக்கப்படுமெனப்பேசிய போதிலும், நான் பொலிசாரிடம் புகார்செய்யவில்லை. பொலிஸார் அங்கிருந்ததால் புகார் செய்யவில்லை .

### இலங்கையிலேயே அதிக பெரும்பான்மை

சட்: நல்லூர் எம் பி. திரு. சிவசிதம்பரம் இலங்கையிலேயே அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளாரென்று தெரியுமா?

சாட்சி; ஆம்.

சட்; இவ்வாறு பேச்சு நிகழ்த்தியதால்தான் அவர்கள் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டனர்?

சாட்சி: யாழ்ப்பாணத்தில் இவ்வாறு பேச்சுக்களை நிகழ்த்துபவர்களுக்கே ஆதரவு அதிகம். அதனாலேயே கூட்டணியினர் வெற்றிபெற்றனர்.

சட்: கலை, கலாச்சாரப் பண்புள்ள இலங்கைவாழ் மக்கள் எப்பகுதியிலாவது இவ்வாறு பேசுவார்களா?

சாட்சி: அவர்கள் அங்கு பேசுவது ஒன்று, கொழும்புக்கு வந்து பேசுவது வேறொன்று. தமிழ்நாடு அமைப்பதே அவர்களின் நோக்கம். இதனாலேயே அவர்களுக்குப் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன.

### தனிச்சிங்களச் சட்டம்

சட்: 1956ல் தனிச்சிங்களச் சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டபோது அதற்கு ஆதரவாக ஐ. தே. கட்சி நடந்து கொண்டதனால் அது தமிழ்மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்தது.

சாட்சி; இல்லை சுதந்திரக் கட்சியே அதைக் கொண்டு வந்தது.

### சிங்களம் மட்டும்

பெரும்பான்மை மக்கள் சிங்களவராக இருப்பதால் இந்த நாட்டில் சிங்களம் மட்டுமே அரச மொழியாக இருப்பது நியாயம்.

சட்: சிங்களம் மட்டும் என்ற கூற்று இலங்கை மக்களை இரு கூறுகப்பிரிக்காதா?

சாட்சி: இது பாராளுமன்றப் பிரச்னை. அங்கேயே தீர்க்கப்படவேண்டும்.

சட்: அவர்கள் கூட்டத்தில் பேசிய பேச்சுக்களை ஒலி பெருக்கி மூலமே கேட்டீர் யார் பேசியது என்று தெரியாது?

சாட்சி: என்னால் சரியாகச் சொல்லமுடியாது.

சட்: இந்தக் கமிஷனுக்கு சட்டப்படி எவர்மீதும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இல்லை. அப்படியிருந்தும் கூட்டணியினரின் பேச்சுப் பற்றி பொலிசாருக்கு அறிவிக்காமல் இங்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளீர்?

சாட்சி: எவருக்கும் தண்டனை பெற்றுக் கொடுக்கும் நோக்கம் எனக்கில்லை.

(ம-இ)

# அகதிகளுக்கான உண்டியல் நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் இனக்கலவரத்தினால் பாதிப்படைந்து அகதிகள் முகாம்களில் இன்றும் இருக்கும் தமிழ்மக்களுக்காக, நாளை புதன்கிழமை, யாழ்நகர் எங்கும், திருநெல்வேலி வளாக தமிழ்மன்ற மாணவ, மாணவிகள் உண்டியல் மூலம் நிதி திரட்டுவர்.

மேற்படி மன்றத் துணைச் செயலாளர் திரு. ஜே. சவிரிமுத்து பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது; இனக் கலவரம் நடைபெற்று ஓராண்டு பூர்த்தியாகும் இன்றையதினத்தில் தமது உடமைகள், உயிர்களை இழந்த தமிழ்மக்களுக்காக, அனுதாபம் தெரிவிக்கும்வகையில் மத வழிபாடுகளில் ஈடுபடுமாறு தமிழ்மக்களை கோரியுள்ளனர். (கெ)

## குமாரசூரிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லுமுன்னர் அப்போதைய லஞ்ச திணைக்கள ஆணையாளர் திரு. இயன் விக்கிரம நாயக்காவுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு தாம் விசாரணை செய்ய இருக்கும் வழக்குகளுக்கான தண்டனைகள்பற்றி கேட்டு அறிந்து கொள்வார் என்றும் திரு. சொய்சா தெரிவித்தார். (இ)

## மாணவரும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதும் நாட்டைப் பிரிப்பதுமே அவர்களின் நோக்கமாக இருந்தது.

சட்: யாழ்ப்பாண மக்கள் இதனைப்பற்றி என்ன பேசுகிறார்கள்?

சாட்சி; பாடசாலை மக்கள் கூட அங்கு தனிநாட்டுக்காக வேலை செய்கிறார்கள்.

சட்: திரு. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்தில் சிங்களப் பொலிசாரைக் குறைக்குமாறு கோரி திரு. ஜே. ஆர்.ஜெயவர்த்தனவுக்கு அறிக்கை சமர்ப்பித்தது தெரியுமா?-ஆம்.

சட்: அவர் யாழ்ப்பாண மக்களுடன் கலந்து ஆலோசனை செய்தாரா?

இவ்வேளையில் குறுக்கிட்ட சட்டத்தரணி திரு. பார்லட் இக்கேள்வி அவசியமில்லையென ஆட்சேபித்தார்.

கமிஷனரும் இந்த ஆட்சேபனையை ஏற்றுக் கொண்டார்.

### கமிஷனர் கருத்து

திரு. அமிர்தலிங்சம் இங்கு சாட்சியமளிக்க இருப்பதால் இதுபற்றி அவரிடமே கேட்கலாம் என்றும் கமிஷனர் தெரிவித்தார்.

சட்; யாழ். வளாகத்தில் சிங்கள மாணவர்கள் இல்லையா? இல்லை.

சட்: சிங்கள மாணவர்கள் திரும்பவும் யாழ். வளாகத்திற்கு வந்தால் சிறப்பான வரவேற்புக் கிடைக்குமா?

### மீண்டும் கலவர சாத்தியக்கூறுகள்

சாட்சி: இல்லை. மீண்டும் கலவரம் தொடங்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு.

சட்: அவர்கள் விடுதிகளில் இருக்கமுடியுமா?

சாட்சி: சிங்களக் குடும்பங்கள் அங்கிருந்தால் தங்க முடியும்.

சட்: இப்போது எத்தனை சிங்களக் குடும்பங்கள் அங்கு உள்ளன

சாட்சி: சுமார் 150 குடும்பங்கள்வரை. (ம-இ)

## உணவுப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### 4 லட்சம் பேருக்கு வேலைஇல்லை

இந்த நாட்டில் 14 லட்சம் பேர் வேலையின்றி இருக்கிறார்கள். இந்த நாட்டை அபிவிருத்திசெய்து வேலையற்றோர் பிரச்னையைத் தீர்க்க மதுறு ஓயாத்திட்டம் போன்ற திட்டங்கள் பெரிதும் உதவி அளிக்கும். எனவே அரசின் இம் முயற்சிக்கு இப்போது தடையாக இருப்பவர்கள் இந்த நாட்டின் சுபிட்சத்துக்கு தீங்கு விளைவிப்பவர்கள் ஆவர். (இ)

## அமிர்...

[1-ம் பக்க தொடர்ச்சி]

விசாரணை செய்யவேண்டியது அவசியமாவதால் வெளிநாடு செல்லுமுன் அவர்களை இங்கு அழைக்க உத்தரவிடுங்கள்என சிங்கள வாலிப முன்னணி சார்பில் ஆஜரான திரு. ஹரிச்சந்திர விஜயதுங்க நேற்று சன்சோனி கமிஷன்முன் கோரிக்கை விடுத்தார்.

அவர்கள் இருவருமே இங்கு சாட்சியமளிக்கவிருப்பதால் அச்சமயம்அவர்களைக் குறுக்கு விசாரணை செய்யலாமென்று கமிஷனர் திரு. சன்சோனி தெரிவித்தார். [ம[

## சமூக குறைபாடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றும் தீர்மானிக்கப்பட்டது. பஸ்களிலும், இந்தவிளம்பரங்களை ஒட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டது

சகல மதங்களையும் சேர்ந்த கட்சி சார்பற்ற 30 பேர்களைக் கொண்ட ஒரு உபகுழு அமைத்து நடவடிக்கை எடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தற்போது பாகுபாடு காட்டப்பட்டு வரும், ஆலயங்கள், தேநீர்க் கடைகள், சலவைத் தொழிற்சாலைகள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் பற்றி, பல இடங்களிலிருந்தும், சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு குழுவிற்கு தகவல் கிடைத்துளளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (க)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# நன்றி நவிலல்

சென்ற 17ந் திகதி காலஞ்சென்ற சி. சின்னத்துரை அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர் வளையங்கள் சாத்தியும், தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்த உற்றார் உறவினர், நண்பர்கள் யாவருக்கும் நன்றி நவில்கின்ற அதேவேளையில் 16-8-78 அன்று நடக்கவிருக்கும் அந்தியெட்டி வைபவத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்பாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

பிள்ளைகள்,
198, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

0064

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15- திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone 389 - Registered as a Newspaper in SriLanka